வர்த்தக விளம்பரம்

**சனிநீராடு**

எண்ணெய் தேய்த்து மிக்க வைற்ஒலிவ் தூள் பாவித்துத் தலை முழுகினா உடல் வெப்பம் சமமடைந்து சுகவாழ்வு கிட்டுகிறது. மிக்கவைற்

(B-2347)


# வடபகுதியில் குர்திஷ்களுக்கு தென்பகுதியில் ஷியாக்களுக்கு

(தெஹிரான்)

ஈராக்கின் வட பகுதியில் குர்திஷ் அகதிகளுக்கும் தென்பகுதியில் ஷியா அகதிகளுக்கும் தனிப்பகுதிகளை ஏற்படுத்த வேண்டும் என ஈரான் யோசனை தெரிவித்துள்ளது. ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலாயதி கனடா வெளிவிவகாரச் செயலாளருக்கு பேட்டியளிக்கும் போது ஈராக்கில் இருந்து அலை அலையாக அகதிகள் வருகின்றனர் என்றும் இதனால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் இருப்பதனாலும் ஈராக்கினுள்ளே அகதி முகாம்களை அமைக்கும்படி ஐ.நா. சபை யோசனை தெரிவித்திருப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை இக்கருத்தை மேலும் வலியுறுத்தப் போவதாக பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர் மீண்டும் தெரிவித்தார். இதற்கு முன்னர் ஜோன் மேஜர் இரு தடவைகள் ஈராக்கின் வடபகுதியில் தங்குமிட வசதியை அமைக்குமாறு கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி ஐந்து வீதமாக குறையும்

(நியூயோர்க்)

வளைகுடா நெருக்கடி அமெரிக்கா மற்றும் கைத்தொழில் நாடுகளின் பொருளாதார மந்தநிலை காரணமாக ஆசியாவின் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் ஐந்து வீதமாக குறையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இந்த நாடுகளின் வளர்ச்சி வீதம் 5.7 வீதமாக இருந்த போதும் இவ்வருடம் பல்வேறு காரணங்களால் 5 சத வீதமாகக் குறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும் ஆசிய நாடுகளின் வளர்ச்சி அடையும் பொருளாதாரம் பாதகமான நிலைகளையும் தாக்குப்பிடிக்கக் கூடியது என்பதால் 1998ஆம் ஆண்டில் இது துரிதமாக வளர்ச்சி அடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வைத்திய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களும் வைத்திய காப்புறுதி திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் இத்தத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 20 ரூபாய் காப்புறுதிப் பணத்தினை செலுத்த வேண்டும் என்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## புதிய பாணியில் மோசடி

(பண்டத்தரிப்பு)

புதிய பாணியிலான சைக்கிள் திருடன் ஒருவன் மக்களால் இனம் காட்டப் பட்டு விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்த இளைய தம்பி அரும்செல்வம் என்ற நபரே விடுதலைப் புலிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டவராவார்.

இவர் பிறரிடம் இரவலாக சைக்கிளை வாங்கிச் சென்று அதனை நாவற்குழி சேமிப்பில் விற்றுவிட்டு அங்கு இலநாமன் தங்கிய பின் மீண்டும் அங்கிருந்து ஒரு சைக்கிளைப் பெற்று வந்து இங்கு அதனை விற்று சில நாட்கள் இங்கு தங்குவார். இவ்வாறு பலதடவைகள் மாறி மாறி புதிய பாணியில் மோசடி வேலைகளை நடத்திவந்துள்ளார். (ச)


கரைச்சிப் பிரதேசசபை, தலைமைச் செயலகம்
கிளிநொச்சி

## மிக முக்கிய அறிவித்தல்

கரைச்சி பிரதேச சபையுடன் தொடர்புள்ள சகல வரியிறுப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள் மின்பாவனையாளர்கள், தனிநபர்களுக்குச் செலுத்த வேண்டிய வாடகைகளை வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டப்படி செலுத்தியவர்கள் போன்ற சகலரும் அவதானிக்க வேண்டியதாவது;

சென்ற 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 13ஆம் திகதி இரவு தொடக்கம் அரசபடையினர், போராளிகள் மோதலினால் கிளிநொச்சி பிரதேசசபைக் கட்டிடம் சகல ஆவணங்களுடனும் எரிந்தமை பற்றி ஈழநாதம் பத்திரிகை மூலம் அறிந்திருப்பீர்கள்.

தற்போது மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புக்கள் சம்பந்தமாக தங்கள் வசமுள்ள பற்றுச்சீட்டுக்களை கரைச்சி பிரதேச சபையில் சமர்ப்பித்து உரிய பதிவேடுகளைப் புனரமைக்க உதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோன்று சோலைவரி, மின்கட்டணம் என்பன 1990ஆம் ஆண்டுக்குப் பின்பு செலுத்திய பற்றுச் சீட்டுக்களையும் சமர்ப்பித்து எமது புத்தகத்தில் வரவு வைக்க ஆவன செய்யுங்கள். அதேபோல் பிணைப் பணங்கள் என்பனவற்றின் பற்றுச்சீட்டுக்களையும் எதிர்வரும் 8.5.91க்கு முன் சமர்ப்பிக்காதவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்கும் நிலைக்கு உந்தப்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

"ஒன்று பட்டால் உண்டே வாழ்வு"

க. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேசசபை
கிளிநொச்சி

05.04.91

(B-2363)


## பண்பாடு பேணும் பல்க. மாணவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கென வகுத்துக்கொண்ட பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் தொடர்ந்தும் பாதுகாக்கும் முகமாக நேற்றுமுன்தினமும் சேற்றுநீர் அபிஷேகம். மற்றும் தண்ணீர் ஊற்றும் விவகாரங்களில் ஈடுபட்டதாகத் தெரிகின்றது.


## பகிரங்க ஏலவிற்பனை

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியில் மாதகல் இணைக்க மன்றத்தினரால் ஒன்றரைப் பரப்பு காணி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இது பற்றிய மேலதிக விபரத்தை அறியவிரும்புவோர் மாதகல் இணைக்கமன்றத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளும்படி செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.


## நிறுவைகளுக்கு முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

சுளிபுரம் பிரதேசசபைக் காரியாலயத்தில் (சுளிபுரம் கிராமசங்க அலுவலகத்தில்) 11ஆம் திகதி (11-4-91) வியாழக்கிழமை தொடக்கம் (19-4-91) வெள்ளிக்கிழமை வரைக்கும் காலை 8-30மணி முதல் மாலை 1-30 மணி வரை சகல நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என நிறுவை அளவைத் திணைக்கள பொறுப்பதிகாரி திரு. எஸ். ருத்திரன் தெரிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் நேரில் வந்து முத்திரையிடத் தவறும் வியாபாரிகள் மீது தகுந்த சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## அபிவிருத்திச்சபை நிர்வாகக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலை அபிவிருத்திச்சபையின் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. தலைவராக அதிபர் க. தம்பிராசாவும், செயலாளராக க. தெய்வேந்திரமும், உபசெயலாளராக ஆ. இலோகநாதனும், பொருளாளராக திருமதி நல்லதம்பியும் கணக்குப் பரிசோதகராக பாலசுந்தரம், திருமதி பூ. சரவணபாலானந்தன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையினர்கள் பதினொருவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

A/L 91 பகல் நேர வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன

O/L புதிய பிரிவு ஆரம்பம்
15-04-91

Spoken English with Grammar
புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றது

(B-2358)


# வேலை வாய்ப்புக்கள்

## செய்தித் தகவல் மையம்

யாழ் மாவட்டத்தில் கல்வி பயின்று வேலை வாய்ப்பின்றியிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேலைகளை இழந்துள்ளவர்களுக்கும் தகுதிக்கும் திறமைக்குமேற்ப தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப் படவுள்ளன.

விண்ணப்பதாரிகள் பெயர் விலாசம்,பிறந்த திகதி, கல்வித்தராதரம், அனுபவம்,தொழில் நுட்பம் ஆகியவற்றைக்குறிக்கும் சான்றிதழ்களுடன் தாம் விரும்பும் தொழிலைக்குறிப்பிட்டு எதிர்வரும் 21-05-1991 க்கு முன்னர் ''நிர்வாகி,செய்தித்தகவல்மையம்,கோப்பாய்'' என்னும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அனுப்பும் விண்ணப்பத்தின் மேலுறையின் இடது பக்க மூலையில் "வேலைபெறுவதற்கான(பதிவு)விண்ணப்பம்'' எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் வரிசைக்கேற்ப வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

- நிர்வாகி
(செ: த: மை)

(B-2357)

## நினைவு கூருகின்றோம்



1991-04-13

**குலம்**
(சந்திரமோகன் இருதயபுரம்-மட்டக்களப்பு)

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா கடற்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**குலம்** (சந்திரமோகன் - இருதயபுரம் மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு கல்குடா சந்தியில் சிறிலங்கா படையினரின் சுற்றி வளைப்பின் போது காயமடைந்து தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரமரணமடைந்த

**சுதர்சன்** (கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் - மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரமரணமடைந்த

**ஈஸ்வரன்** (தம்பிராசா ஆழ்வாப்போடி - புதுக்குடியிருப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2349)

**சிந்தனைக்கு**

புருஷன் பெண்சாதி சண்டையிட்டால்
பலகையைப் போட்டுப் படுப்பார்கள்.

— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2263
த.பெ.எண் 05

# வன்முறைக்கு வழிதேடும் இந்திய தேர்தல் களம்

இந்தியாவின் பத்தாவது தேர்தல் களம் வன்முறை நிறைந்ததாகவும், இரத்தம் தோய்ந்ததாகவும் இருக்கும் என்பது அரசியல் அவதானிகள் பலரினதும் கணிப்பு இதனை இந்திய தேர்தல் கமிசன் தலைவர் டி. என். சேசன் அவர்களும் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடை பெறும் தேர்தல்களில் எப்பொழுதும் வன்முறைக்குப் பஞ்சம் இல்லை ஒவ்வொரு தேர்தலின் போதும் பலர் கொல்லப்படுவதும், கடத்தப்படுவதும், பொது தனியார் சொத்துக்கள் சேதமாக்கப்படுவதும் வழமையான நடைமுறைகள் ஆகும். வாக்களிப்புக்களில் பங்குபற்றாமலும், கட்சித் தாவல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும், கட்சிதாவியவர்களைப் பழிவாங்குவதற்காகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் கடத்தப்படுவதும், மறைக்கப்படுவதும் சாதாரண வழக்காகக்கொண்டுள்ள இந்திய அரசியலில் தேர்தல் வன்முறைகள் இடம் பெறுவது அவ்வளவு பெரிய விடயமல்ல.

ஆனால், இம்முறை தேர்தல் வன்முறை முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவில் இடம் பெறும் என்பதே அரசியல் அவதானிகளினதும், தேர்தல் கமிசனரின் கூற்றுக்கான பொருளாகும். இவ்வாறு தேர்தல் வன்முறை நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்ப்பதற்கும் போதியளவு நியாயங்கள் உண்டு.

கடந்த வருட இறுதியில் வி பி சிங் அரசாங்கம் கலைக்கப்பட்ட போதே அடுத்த தேர்தல் வன்முறைகள்மாக இருக்கும் என பலராலும் எதிர்வு கூறப்பட்டது அதை வலியுறுத்துமாப் போல் இன்று தேர்தல் களத்தில் இறங்கியுள்ள அரசியல் கட்சிகளும் தமது பிரகடனங்களை வெளியிட்டு வருகின்றன.

மண்டல் கமிசன் தீர்மான அமுலாக்கல், ராம ஜென்மபூமி-பாபர் மசூதிப் பிரச்சினை என்பனவற்றால் ஆட்சி கவிழ்க்கப்பட்ட வி பி சிங் தலைமையிலான ஜனதாதள கட்சி ஒருபோதும் இப்பிரச்சினையைத் தேர்தல் களத்தில் வைக்காமல் விடப் போவதில்லை. இதுவே ஜனதா தளத்தின் பிரசார அடித்தளமாக இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

இந்துமத அடிப்படை வாத கட்சியான சிவசேனையுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பாரதீய ஜனதாக் கட்சியோ இந்து சாம்ராச்சியம் என்பதை ஒருபோதும் கைவிடப் போவதில்லை. இந்நிலையில் ஜனதாதளம், பாரதீய ஜனதா ஆகிய இரு கட்சிகளின் கொள்கைகளுமே ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாகும். இக்கொள்கைகள் இரண்டும் இந்து முஸ்லிம் கலவரங்களையும், 'உயர்சாதி' தாழ்ந்தசாதி' இந்து மக்களுக்கும் இடையிலான வன்முறை அலைகளை தூண்டிவிடுதல் தவிர்க்க முடியாததாகும்.

இந்நிலையில், காபந்துப் பிரதமர் சந்திரசேகரின் ஜனதா தள எஸ் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் எழுந்துள்ள கருத்து முரண்பாடு தேர்தல் களத்தில் இரத்த வெள்ளம் ஓடுவதற்கு மேலும் வழியை ஏற்படுத்திவிட்டாலும் ஆச்சரியம் இல்லை.

அஸாம், பஞ்சாப் பகுதிகளில் தேர்தலை நடத்தலாம் என சந்திரசேகர் அமைச்சரவை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுக்கு பரிந்துரை செய்துளது. அதே வேளை காங்கிரஸ் கட்சித் தலைவர் இது தருணம் அல்ல, தேர்தல் வைக்க அனுமதிக்க கூடாது என ஜனாதிபதியைக் கேட்டுள்ளார் ஜனதா தள எஸ்சிற்கும் காங்கிரசிற்கும் இடையில் உள்ள இம்மோதலால் மக்கள் பெருமளவு இரத்தம் சிந்தவேண்டி ஏற்படலாம்.

பல்வேறு மதங்களையும் இனங்களையும் மொழியையும், சாதி அமைப்பையும் கொண்டுள்ள இந்தியாவில் அதிகார மோகம் கொண்ட அரசியல்வாதிகள் உள்ள வரை தேர்தல் வன்முறைகள் தவிர்க்கமுடியாதவைதான். மக்களை சிறுசிறு அலகுகளாகப் பிரித்து தமது சுயநலத்திற்காக அவர்கள் பயன்படுத்திக் கொண்டே இருப்பார்கள். ஆனால் இரத்தம் சிந்தப் போவது மக்களே.

இந்நிலை இத் தேர்தலில் மட்டுமல்ல, இனிவரும் தேர்தல்களிலும் நடைபெற்றுக்கொண்டே தான் இருக்கும். இந்திய மக்கள் என்று விழிப்புணர்வு பெற்று சிந்தித்து வாக்களிக்க முற்படுகின்றார்களோ அன்றுதான் இவ்வன்முறைகள் நிறுத்தப்படும் அது நடைபெறுமா?

தேனீ வளர்ப்பு

# இலாபம் தரும் தொழில் மட்டுமல்ல; சிறந்த பொழுது போக்குமாகும்

(யாழ்ப்பாணம்)

தேனீ வளர்ப்பு இலாபம் தரும் தொழில் என்பதோடு வீட்டிலிருக்கும் இளைஞர்கள், யுவதிகள், ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கான ஓர் சிறந்த பொழுது போக்குமாகும். தேன் தரும் பூக்கள் இருக்கும் இடங்களில் தேனீக்களை வளர்க்க முடியும்.

தமிழீழத்தில் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை பெருமளவு பூக்கள் மலர்கின்றன. இக்காலத்தில் ஒரு தேன்கூடு இருப்பின் குறைந்தது 3 போத்தல் சுத்தமான தேனைப் பெறமுடியும்.

அத்துடன் நகரப் பகுதிகளிலும் மா வேம்பு இலுப்பை நாவல், புளி ஆகிய மரங்கள் அதிகளவு காணப்படுவதனால் இங்கும் தேனீ வளர்ப்பை மேற்கொள்ள முடியும்.

எனவே தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்புவோர் அதற்குரிய ஆலோசனைகளையும், சேவைகளையும் பெறவிரும்புவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# புதுவருட தினத்தன்று 'கவிதைப்பட்டிமன்றம்'

அகில இலங்கை கம்பன்கழகத்தினரால் புத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடரின் இரண்டாவது நிகழ்ச்சியாக புத்தாண்டுக் 'கவிதைப்பட்டி மண்டபம்' கம்பன் கோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு திரு க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. என். கே பத்மநாதன் குழுவினரின் மங்கல இசையும் 'நமக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?' என்ற தலைப்பிலான கவிதைப்பட்டி மண்டபமும் நடைபெற உள்ளது.

# வடக்கு வலிகாமம் பகுதியில் இயங்காதநிலையில் நூலகங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் எந்த ஒரு நூலகமும் இயங்காத நிலையில் இருந்து வருகிறது. சுன்னாகம் நூலகம் உட்பட தெல்லிப்பழையிலிருந்து மல்லாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நூலகமும் கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக பூட்டிய நிலையில் உள்ளது.

இந்நிலை குறித்து வலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த சில பெற்றோர்களும், மாணவர்களும் மல்லாகத்திலுள்ள தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபருடன் பேசியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கவலை தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாணவர்களும், பொது மக்களும் தமக்கு நிச்சயம் இப்பகுதியில் ஒரு நூலகம் தேவை என கிராமசபை அதிகாரிகளிடம் முறையிட்டதாகவும் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவ்வதிகாரிகள் கூறியபோதிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். (கோ)

படவிநியோகஸ்தர் முடிவிற்கெதிராக

# 2400 திரையரங்குகள் தமிழகத்தில் மூடப்பட்டன

(சென்னை)

தமிழகத்தில் உள்ள சுமார் 2400 திரையரங்குகள் நேற்றுமுதல் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. என தமிழ்நாடு அரங்கு உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இவ்வறிவித்தல் மேற்படி சங்கம் திரைப்பட அலுவலகங்களின் செயற்பாடுகளை பகிஷ்கரிப்பதற்கு முடிவெடுத்ததன் பின்னர் வெளியிடப்பட்டது. திரைப்பட விநியோகஸ்தர்கள் ஒருமனதாக முடிவு செய்ததை அடுத்து அதனை எதிர்க்கவே திரைப்பட அரங்குகள் மூடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டது.

# மோதல்களை நிறுத்துவதற்கு தொண்டமான் முயற்சிப்பாராம்

(சென்னை)

இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல்களை நிறுத்துவதற்கு கால்நடைத்துறை அமைச்சர் எஸ் தொண்டமான் முயற்சி எடுக்கக் கூடும் என்று இந்திய வானொலி அறிவித்துள்ளது.

நேற்றுமுன் தினம் செய்தியாளர்கள் இடையே பேசிய தொண்டமான் இலங்கையில் உள்ள தமிழ்க்குழுக்களும், கொழும்பிலுள்ள தமிழ்ப்பிரமுகர்களும் அரசாங்கத்திற்கும் போராளிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் ஏற்படுத்துமாறு தன்னைக் கேட்டுக்கொண்டதாக தெரிவித்ததை அடுத்தே இந்திய வானொலி நிருபர் இதனைத் தெரிவித்ததாக அச்செய்தியில் கூறப்பட்டது.

அத்துடன் தொண்டமான் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ இதற்கான ஒப்புதல் கிடைத்தால் தான் இந்த முயற்சியில் ஈடுபடலாம் என்று குறிப்பிட்டார் என்றும் அச்செய்தி கூறியது.

வடபகுதி

# மக்களின் போக்குவரத்திற்கு கப்பல்சேவை ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் கொழும்பு பயணத்தை இலகுவாக்கும் பொருட்டு விரைவில் கப்பல் மூலம் போக்குவரத்து ஆரம்பிக்க யாழ் அரச அதிபர் தமது சேவையின் இறுதிக் காலத்தில் முயற்சி எடுத்துள்ளதாக செயலக அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் தாம் உரையாடி கொழும்புக்கு வரும் கொழும்புக்கு போகும் தமிழ் மக்களை எந்தவித இராணுவ தாக்குதல்களில் இருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த நடவடிக்கையை தாம் எடுத்துள்ளதாக அரச அதிபர் தெரிவிக்கிறார் என்று அந்த அதிகாரிகள் கூறினர். (கோ)

# சிறுவர்பூங்காவும் நினைவாலயமும்

(செ. த. மை:)

மன்னார் கோவத்துறை இராணுவ முகாம் தாக்குதலின்போது வீரமரணமடைந்த தம்பசிட்டியைச் சேர்ந்த மேஜர் ரஞ்சன் (சித்தப்பா) நினைவாக சிறுவர் பூங்காவும் நினைவாலயமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை முதலாம் குறுக்குச் சந்தியில் மாணவர் பொது நூலகத்துக்கருகே அமைக்கப்பட்டு வரும் இந்நினைவாலயக் கட்டடவேலைகளுக்கு பணம், பொருள் உதவ விரும்புவோர், மாணவர் பொது நூலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் தெரிவித்துள்ளது.

# திருட்டுபோனவை பிடிபட்டது

(பண்டத்தரிப்பு)

திருடிய சைக்கிளின் உதிரிப் பாகத்தைக் கிணற்றில் போட்ட முற்பட்டவர் விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டார்.

கடந்த வாரம் சாவகச்சேரி பகுதியில் திருடிய புதிய றோலி சைக்கிளை பண்டத்தரிப்பில் வைத்துக் கழற்றி அதன் 'பார்' ஐ தூர்ந்த கிணற்றில் போட முற்பட்ட மாதகலைச் சேர்ந்த விக்ரர் நிசாட் என்பவர் பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இச் சைக்கிளின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார். (ச)

# சுப கருமம் வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதுவருட சுபகருமம் ஆற்றும் பொருட்டு நாளை 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் 2 ஆவது கிளை (ஸ்ரான்லி வீதி மவிப்பாய், கன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய பகுதிகளில் உள்ள இலங்கை வங்கிகள் காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை திறந்திருக்கும் என வட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான புதுக் கணக்குகள் ஆரம்பித்தல், சேமிப்புச் சான்றிதழ் விற்பனை போன்ற நடவடிக்கைகள் அன்று நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

